# உள்ளாட்சி

## கிராமசபையின் உரிமைகள் மற்றும் கடமைகள்

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை**

**Institute of Human Rights Advocacy and Research, Chennai**

**M:** 86680 91453 | **E:** localgovernment@hrf.net.in | **W:** hrf.net.in

# உள்ளாட்சி: கிராமசபையின் உரிமைகள் மற்றும் கடமைகள்

ஜனவரி 2021

Creative Commons License 4.0

Supported by: Laudes Foundation

Prepared by: மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை
Institute of Human Rights Advocacy and Research, Chennai

## மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF) சமூக ரீதியாக விலக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் சமூகப்பிரிவுகளின் ஒன்றோடொன்று தொடர்புடைய தன்மையை மனதிற்கொண்டு சமூகத்தில் எளிதில் இலக்காகும் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் செயல்படுகிறது.

சட்டங்கள் மற்றும் மாநில இயங்கமைப்புகளை தெளிவுப்படுத்தி, திறனை வளர்த்துக்கொள்வது, ஜனநாயகத்தை ஆழப்படுத்த அவர்களை ஆதரிப்பது ஆகியவை மூலமாகவும், இந்த சமூகங்களுக்கு அவர்களின் அரசியலமைப்பு உரிமைகளைப் பயன்படுத்தவும், அவர்களின் குரலை அதிகரிக்கவும், மற்றும் முடிவெடுப்பதில் அவர்களின் பங்கேற்பை மேம்படுத்தி, அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான மற்றும் நெகிழ்திறன்கொண்ட சமூகங்களை உருவாக்க பணிசெய்கிறது.

அனைத்து நேரங்களிலும் கௌரவத்துடன் கூடிய பாதுகாப்பானதொரு வாழ்க்கைக்கான மனித உரிமை கலாச்சாரத்தை ஊக்குவிக்கவும், குடிமை ஈடுபாட்டிற்கும் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்களை ஆதரிப்பதற்குமான பொதுத்தளத்தை விரிவுப்படுத்தவும் செயல்படுகிறது.

# நன்றி

இந்தக் கையேடு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள், அரசாணைகள், அறிவுரைகள், சட்டம், நடைமுறைக் குறிப்புகள், கொள்கை குறிப்பு, குடிமக்கள் சாசனம், மாநில ஊரக வளர்ச்சி முகமையின் (SIRD) ஊராட்சி பயிற்சி கையேடு, கு. வள்ளிநாயகம், ந.சி. சிதம்பரம், க. சுப்பிரமணியம் மற்றும் ச. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரால் தொகுக்கப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் நிர்வாகம் மற்றும் 1997–ஆம் ஆண்டு முதல் ஊராட்சி அரசாங்கத்தை வலிமைப்படுத்துவதற்காக மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பினால் நடத்தப்பட்ட பல்வேறு செயல்பாடுகளின் மூலம் கிடைத்த அனுபவங்கள் ஆகியவற்றில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளது. தொகுப்பு மற்றும் எளிமையாக்கம் பணியை மேற்கொண்ட HRFன் P. தமிழரசி (துணை இயக்குனர், HRF), பிழைத்திருத்தலில் உதவிய N. சித்ரா (மூத்த ஒருங்கிணைப்பாளர், HRF) J. முருகேசன் (துணை ஒருங்கிணைப்பாளர்), V. இந்திரா, வடிவமைப்பில் ஈடுபட்ட C. அனிதா டெனிஷ் மற்றும் அட்டைப்படம் வரைந்த ஓவியர் C. சத்யன் ஆகியோருக்கு எங்களின் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# முன்னுரை

இந்தியாவில் அந்தந்த பகுதியில் உள்ள 18 வயது நிரம்பிய அனைவரும் உறுப்பினர்களாக உள்ள அரசியலமைப்பு ரீதியான ஒரே அமைப்பு கிராமசபையாகும். மற்ற அமைப்புகளான பாராளுமன்றம், மாநில சட்ட மன்றங்கள், மாவட்டம் மற்றும் கிராம பஞ்சாயத்து ஆகியவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே உறுப்பினர்களாக உள்ளனர். இது அரசாங்கத்தின் அரசியலமைப்பு வழிமுறைகளில் கிராமசபை மற்றும் அதன் முடிவுகளுக்கு நிகரற்ற நியாயத்தன்மையையும் சக்தியையும் தருகிறது.

கிராமசபைக்கு பல முக்கியமான அதிகாரங்களும் பொறுப்புகளும் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக, இது ஒரு ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறல் அமைப்பு. இது பயனாளிகளைப் பரிந்துரைத்து, செலவழித்த பணத்தொகை, எவ்வாறு செலவிடப்பட்டுள்ளது மற்றும் இருப்புத்தொகை ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்க முடியும். இவ்வாறு கிராமசபை என்பது அரசாங்கத்தை கண்காணிப்பதற்கான ஒரு கூட்டு விழிப்புணர்வு வழிமுறையாகும்.

கிராமசபையின் சக்தியின் மூலம் ஒடிசா மாநிலம் நியம்கிரியில் வெறும் 12 ஆதிவாசி கிராமசபைகள் மத்திய அரசால் ஊக்குவிக்கப்பட்ட 50,000 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டத்தை முறியடிக்க முடிந்தது. கிராமசபை அனுமதியின்றி, அவர்களின் நிலத்தை அரசாங்கத்தால் சுரங்கத்திற்காக ஒரு நிறுவனத்திற்கு வழங்க கையகப்படுத்த முடியாது. இத்தகைய சக்தி – கடமை – இயற்கை வளங்களை பாதுகாத்தல் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தின் நல்வாழ்வுக்காக செயல்படுவது ஆகியவை ஒவ்வொரு கிராமசபையினுள்ளும் உள்ளடங்கியுள்ளது.

இந்த சக்தி, ஒட்டுமொத்த மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட வேண்டும். கிராமத்தில் உண்மையில் தேவையுள்ள நபர்கள் யார் என்பது கிராமசபைக்குத் தெரியும். சரியான பயனாளிகள் – குறிப்பாக தலித் மற்றும் ஆதிவாசி சமூக மக்கள், மாற்றுத்திறனாளிகள், தனித்து வாழும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் ஆகியோர் அரசின் நலத்திட்டங்களுக்கு தேர்வு செய்யப்படுவதை கிராமசபை உறுதி செய்ய வேண்டும்.

இது ஒவ்வொரு கிராமசபையின் மிகப்பெரிய பொறுப்பு மற்றும் இணையற்ற வாய்ப்பாகும். கிராமசபையின் உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிந்துக் கொள்வதோடு, விதிவிலக்கு இல்லாமல் அனைத்து கிராமசபை உறுப்பினர்களும்,

கிராமத்தில் உள்ள அனைத்து பெரியவர்களும் தங்கள் கிராமத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு கூட்டாக உழைப்பதோடு மிகவும் பின்தங்கிய மக்கள் முன்னுரிமைப் படுத்தப்பட்டு அவர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற இந்த சிறிய புத்தகம் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**எட்வின்**

அறங்காவலர் மற்றும் இயக்குனர் (நிகழ்ச்சிகள்)

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

ஜனவரி 2021

# கிராமசபை
# பங்கேற்பு ஜனநாயகத்தின் திறவுகோல்

## கிராமசபை ஓர் அறிமுகம்

ஊராட்சி அமைப்பு அது ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தை அடைய வெளிப்படைத்தன்மையுடனும், மக்கள் பங்கேற்புடனும் செயல்படுவது மிக அவசியம். முறையான கிராமசபை கூட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து மக்களின் பங்கேற்பை உறுதி செய்து அடித்தள ஜனநாயகத்தை நிலைநிறுத்த முடியும். 73வது சட்டத்திருத்தம் ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராமசபை தோற்றுவிப்பை கட்டாயமாக்குகிறது.

இந்திய அரசியல் சாசனச் சட்டத்தின் 73வது திருத்தத்தின் பிரிவு 243A-படி "மாநில அரசின் சட்டப்பேரவையால் வகுத்துரைக்கப்படும் சட்டத்திற்கிணங்க கிராமசபை, கிராம ஊராட்சி அளவில் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஆற்றி வரும்".

## கிராமசபை கூட்டம் கூடுவதால் உண்டாகும் நன்மைகள்

- கிராம முன்னேற்றத்திற்கான செயல்பாட்டில் அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்பது.
- முடிவுகள் எடுப்பதில் நேரிடையான பங்கு.
- வெளிப்படையான நிர்வாக முறை.
- சமூகத் தணிக்கைக்கான வழிவகைகள்.
- நிதி வருவாயை பெருக்க வழிமுறைகளைக் கண்டறிதல்.

## 1. கிராமசபை கூட்டம் ஏன் கூட்டப்படுகிறது ?

கிராம முன்னேற்றத்திற்கான செயல்பாட்டில் சாதி, மத, இன பேதமின்றி அனைவரும் பங்கேற்கவும், அது குறித்த முடிவுகள் எடுக்கவும், நிதி வருவாயை பெருக்கி நிர்வாக முறையை சமூகத் தணிக்கையுடன் வெளிப்படையாக மக்களிடம் பகிர்ந்துக்கொள்ளவும் கிராமசபை கூட்டப்படுகிறது.

### *கிராமசபை உறுப்பினர்கள்*

ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு கிராமசபை உருவாக்கப்பட வேண்டும். அந்த ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட அனைவரும் கிராமசபை உறுப்பினர்கள் ஆவர். *(தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 3, 243 (b)).*

## 2. கிராமசபைக் கூட்டத்தினை யார் கூட்ட வேண்டும் ?

கிராமசபை கூட்டம் ஊராட்சித் தலைவரால் கூட்டப்பட வேண்டும். அவர் இல்லாத நிலையில் ஊராட்சியின் துணைத்தலைவர் கூட்டத்தை கூட்டுவார். கிராம ஊராட்சித் தலைவர் கூட்டத்தை கூட்டத்தவறினால் ஊராட்சி ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித்தலைவர்) கூட்டத்தை கூட்டுவார்.

### *கிராமசபை கூட்டப்பட வேண்டிய நாட்கள் மற்றும் விவாதப் பொருட்கள்*

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு–3(2)ன் படி கிராமசபைக் கூட்டம் ஓர் ஆண்டில் குறைந்தது இரண்டு முறையாவது கூட்டப்பட வேண்டும். எனினும், இரண்டு கூட்டங்களுக்கு இடையில் ஆறுமாத கால இடைவெளி இருத்தல் கூடாது. அரசாணை எண் 245 ஊ.வ(சி1) துறை நாள் 19.11.1998 ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒரு ஆண்டில் நான்கு முக்கிய நாட்களில் கிராமசபை கூட்டத்தை கூட்ட வேண்டும்.

**மாதிரி விவாத பொருட்கள் (வழிகாட்டலுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது)**

| கால அளவு | வரையறுக்கப்பட்ட நாள் | பொருட்கள் |
|---|---|---|
| முதல் காலாண்டு (ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்கள்) | தொழிலாளர் தினம் (மே 1) | அரசின் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் பட்டியல் மற்றும் ஊராட்சிகள் ஒப்புதல் அளித்த வளர்ச்சிப் பணிகள் கிராமசபை கூட்டத்தின் முன்னர் வைக்கப்படுதல். |
| இரண்டாம் காலாண்டு (ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய மாதங்கள்) | சுதந்திர தினம் (ஆகஸ்டு 15) | வறுமை ஒழிப்புத் திட்டம் உட்பட அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் திட்டங்களினால் தனிநபர் மற்றும் சமுதாயத்தினர் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் பயன்பெறும் தன்மையினை எடுத்துரைத்தல். |
| மூன்றாவது காலாண்டு (அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்கள்) | காந்தி பிறந்த நாள் (அக்டோபர் 2) | ஊராட்சி மற்றும் அரசின் இதர துறைகள் மேற்கொள்ளும் வளர்ச்சிப் பணிகள் குறித்து இடைநிலை ஆய்வு மேற்கொள்ளல்.<br>ஊராட்சியின் முந்தைய ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு கணக்கின் மீதான தணிக்கை குறிப்புகள் கிராமசபை கூட்டத்திற்கு முன் சமர்ப்பித்தல். |
| நான்காவது காலாண்டு (ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்கள்) | குடியரசு தின விழா (ஜனவரி 26) | ஊராட்சியின் வளர்ச்சிப் பணி தொடர்பாக அடுத்து வரும் நிதி ஆண்டிற்கான திட்ட அறிக்கையினை கிராமசபை கூட்டத்தில் முன்வைத்து ஒப்புதல் பெறுதல். |

கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய பொருட்கள் கிராம ஊராட்சியில் முடிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமசபைக் கூட்டத்திற்கு முன்பும்,

(1) கட்டாய விவாத பொருட்கள்,
(2) கூடுதல் விவாத பொருட்கள்,
(3) நிதி நிலை விவாதம்,

என்ற வகையில் கூட்டத்தின் விவாத பொருட்கள் ஊராட்சி உறுப்பினர்கள் ஏற்கனவே தீர்மானம் செய்வது பயனுள்ள கிராமசபை கூட்டத்தினை நடத்திட உதவும். இது தவிர அரசு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழிகாட்டுதலின் படியும் விவாத பொருட்கள் இடம் பெறலாம்.

## 3. கிராமசபை கூட்டம் நடத்தும் முறை

***இடம்*** : கிராமசபைக் கூட்டம் ஒவ்வொரு ஊராட்சியிலும் அந்தந்த ஊராட்சி எல்லைக்குட்பட்ட பொது இடத்தில் ஒவ்வொரு வார்டிலும் சுழற்சி முறையில் கூட்டப்பட வேண்டும். *(அரசாணை (நிலை) எண் **150** ஊ. வ. மற்றும் ஊராட்சித் (சி4) துறை நாள் **25.09.2006**).*

***நாள்*** : கிராம ஊராட்சித்தலைவர் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் குறிப்பிடும் நாள். மாநில அரசு அல்லது மாவட்ட ஆட்சித்தலைவரால் அறிவிக்கப்பட்டாலன்றி விடுமுறை நாட்களில் கூட்டம் நடத்தக் கூடாது.

***நேரம்*** : காலை 11 மணிக்கு கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

### *கூட்ட அறிவிப்பு*

- கூட்டம் நடைபெறுவதற்கு ஏழு முழு நாட்களுக்கு முன்பு கூட்ட அறிவிப்பின் நகல் மற்றும் பொருட்கள், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு (ஆய்வாளர்) அனுப்ப வேண்டும்.

- கூட்டம் நடைபெறவுள்ள இடம், தேதி, நேரம் மற்றும் பொருட்கள் குறித்து கிராம ஊராட்சியின் மக்கள் வாழும் அனைத்து குடியிருப்புகளிலும் துண்டு பிரசுரங்கள் மற்றும் தண்டூரா மூலம் கூட்டம் நடைபெறுவதற்கு ஏழு முழு நாட்களுக்கு முன்பு அறிவிக்க வேண்டும்.

- கிராம ஊராட்சி அலுவலகம் மற்றும் முக்கிய பொது இடங்களான பள்ளிகள், சத்துணவு மையங்கள், தொலைக்காட்சி அறைகள், வழிபாட்டுத்தளங்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் முதலிய இடங்களில் எழுத்து மூலமான அறிவிப்பை ஒட்டி விளம்பரப்படுத்த வேண்டும்.

### கூட்டத்திற்கு தலைமை ஏற்றல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு–3 ல் (6)ன்படி கிராம ஊராட்சித்தலைவர் கிராம சபையின் கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்த வேண்டும். கிராம ஊராட்சித்தலைவர் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத போது துணைத்தலைவரும், தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகிய இருவருமே கூட்டத்திற்கு கலந்து கொள்ள இயலாத போது கூட்டத்திற்கு வந்துள்ள கிராம ஊராட்சி உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுகின்ற உறுப்பினர் ஒருவர் தலைமை வகித்தல் வேண்டும்.

### கூட்டத்திற்கு வரவேண்டிய குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை

அரசாணை (நிலை) எண். 130, ஊ. வ. (ம) ஊராட்சித் (சி4) துறை, நாள் 25.09.2006 ன்படி கிராமசபைக் கூட்டம் நடத்துவதற்கு மக்கள் தொகையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு குறைவெண் வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை | குறைவெண் வரம்பு |
|---|---|
| 500 வரை | 50 |
| 500 முதல் 3,000 வரை | 100 |
| 3001 முதல் 10,000 வரை | 200 |
| 10,001 க்கு மேல் | 300 |

கிராமசபை கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய குறைந்தபட்ச உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் கலந்து கொள்ள வேண்டும். கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மக்கள் தொகை எத்தனை சதவீதம் உள்ளதோ அத்தனை சதவீத ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் கிராம சபையில் கலந்து கொள்ள வேண்டும் என்று குறைவெண் வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### கூட்டம் ஒத்திவைப்பு

கூட்டம் கூட்டப்பட வேண்டிய நேரத்திலிருந்து அரை மணி நேரத்திற்குள் குறைந்தபட்ச உறுப்பினர்கள் வருகை தரவில்லையென்றால் கூட்டத்தலைவர் கூட்டம் நடைபெறும் மற்றொரு நாள் மற்றும் நேரத்தை உறுப்பினர்களுக்கு அறிவித்து கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டும்.

### கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பு தயாரித்தல்

கூட்டத்திற்கான நிகழ்ச்சிக் குறிப்பு, கிராம ஊராட்சியில் கலந்தாலோசித்து அதன் தலைவரால் தயாரிக்கப்படும். சென்ற கிராமசபைக் கூட்ட முடிவுகள் மீது எடுக்கப்பட்ட

நடவடிக்கை அறிக்கை இதில் இடம் பெற வேண்டும். மேலும் அரசு மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழிகாட்டுதலின்படியும் நிகழ்ச்சிக் குறிப்புகள் இடம் பெறலாம்.

### கூட்டத்தலைவர் கூட்டத்தின் ஒழுங்கு காத்தல்

கிராமசபைக் கூட்டத்தின் தலைவர் கூட்டத்தின் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும். கூட்டத்தில் எழுப்பப்படும் அனைத்து ஒழுங்கு பிரச்சனைகளையும் முடிவு செய்வார். கூட்டத்தலைவர் முடிவு செய்யும் எந்தவொரு ஒழுங்குப் பிரச்சனையின் மீதும் விவாதித்தல் கூடாது. இதில் அவருடைய முடிவே இறுதியானது.

### கூட்டப் பார்வையாளர்

கிராம ஊராட்சியில் கிராமசபைக் கூட்டம் சிறப்பாக நடத்துவதற்கு ஏதுவாக கிராமசபை கூட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும், அரசின் பல்வேறு அலுவலர்களும் கலந்து கொண்டு கிராம சபையின் நோக்கம் மற்றும் அரசின் அனைத்து துறை நலத் திட்டப்பணிகள் குறித்து விளக்கவும், அக்கூட்டங்களில் அரசு அலுவலர்கள் பற்றாளராக (Nodal Officer) கலந்து கொள்ளலாம்.

### வருகைப்பதிவேடு

கூட்டத்திற்கு வரும் கிராமசபை உறுப்பினர்களின் வருகையை இதற்கென பராமரிக்கப்படும் வருகைப் பதிவேட்டில் பதிவு செய்ய கூட்டத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### கூட்ட நடவடிக்கைகள்

கூட்ட நடவடிக்கைகளை வருகைப் பதிவேட்டிலேயே பதிவு செய்து கூட்டம் முடிவதற்கு முன் கூட்டத்தில் தலைவர் படித்து காண்பித்து பின் கையொப்பமிட வேண்டும். கிராமசபைக் கூட்ட நடவடிக்கைகளை அடுத்த கிராம ஊராட்சிக் கூட்டத்தில் பரிசீலனைக்கும், மேல் நடவடிக்கைக்கும் வைக்கப்பட வேண்டும். கிராமசபைக் கூட்டத்தின் வருகை மற்றும் நடவடிக்கைகளை புகைப்படம் மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

### கூட்ட நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தல்

கிராம ஊராட்சி தலைவரானவர் கிராமசபைக் கூட்டம் முடிவுற்ற ஏழு தினங்களுக்குள் கூட்ட நடவடிக்கைகளின் நகலை, மாவட்ட ஆட்சியருக்கு (ஆய்வாளருக்கு) சமர்ப்பிக்க வேண்டும்.

### கிராமசபை கூட்டத்திற்கான செலவு

கிராம ஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சி ஒப்புதலுடன் ஒரு கிராமசபைக் கூட்டத்திற்கு ரூ. 1000/– வரை செலவு செய்யலாம். *(அரசாணை நிலை எண். 160 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள் 30.09.2008).*

***கிராமசபைக் கூட்டத்திற்கான முக்கிய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள்***

- கிராமசபைக் கூட்ட வருகைப் பதிவேடு.
- கிராமசபைக் கூட்டத் தீர்மானப் பதிவேடு.
- கிராம சபையில் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டப் பயனாளிகள் விவரப் பதிவேடு.
- ஊராட்சி கணக்குகளின் தலைப்பு வாரியாக வரவு மற்றும் செலவு விவரம்.
- ஊராட்சி கணக்குகளின் ஆண்டறிக்கை.
- ஊராட்சி கணக்குகளின் மீது தணிக்கை அலுவலரின் தணிக்கைக் குறிப்பு.
- கிராம ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் செலவின விவரம் மற்றும் இதனைச் சார்ந்த பதிவேடுகள் சமூக தணிக்கைக்கு வைக்கப்பட வேண்டும்.
- அரசால் அவ்வப்போது கிராமசபை ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டிய பொருள் சார்ந்த ஆவணங்கள்.

***கிராமசபைக் கூட்டம் எக்காரணத்திற்காக ஒத்தி வைக்கப்படலாம் ?***

கூட்டத்திற்கான குறைந்தபட்ச குறைவெண் வரம்பின்படி உறுப்பினர்கள் வருகை இல்லையென்றால் எந்தவொரு பொருளும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. மேலும் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை காரணமாக கூட்டம் ஒத்தி வைக்கப்படலாம்.

**ஒரு கிராமசபைக் கூட்டத்திற்கும் அடுத்த கிராமசபைக் கூட்டத்திற்கும் இடையே உள்ள தொடர்பு என்ன ?**

முந்தைய கிராமசபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் / தீர்மானங்கள் அது குறித்த செயல்பாடுகள் தற்போது நடைபெறும் கிராமசபைக் கூட்டத்தில் படிக்கப்பட்டு விளக்கப்பட வேண்டும்.

***கிராம சபையின் கடமைகள் மற்றும் அதிகாரங்கள் என்னென்ன ?***

- கிராம ஊராட்சியின் வரவு செலவு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்.
- ஆண்டு தணிக்கை அறிக்கை பரிசீலனை செய்தல்.
- கிராம குழுக்களின் பணிகள் மற்றும் பரிந்துரைகள் கிராம சபையில் விவாதித்தல்.
- கிராம ஊராட்சியின் ஆண்டு வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்.

- தனி நபர் பயன்பெறும் திட்டங்களுக்கான பயனாளிகள் பட்டியலுக்கு அங்கீகாரம் அளித்தல், சமுதாய சொத்துக்களை ஏற்படுத்த தீர்மானித்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.
- திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்பாட்டில் உள்ள பல்வேறு விவரங்கள் குறித்து ஆய்வு செய்தல் மற்றும் அறிவுரை வழங்குதல்.
- ஊராட்சிகளால் நிறைவேற்றப்படும் பணிகளின் தரத்தை சமூகத் தணிக்கை மூலம் கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.
- கிராம ஊராட்சியால் கடந்த ஆண்டு செயல்படுத்தி முடிக்கப்பட்ட பணிகளை ஆய்வு செய்தல் மற்றும் நடப்பு ஆண்டில் கிராம ஊராட்சி, அரசுத் துறைகள் மற்றும் முகமைகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளைப் பரிசீலனை செய்தல்.
- கிராம ஊராட்சிப் பகுதியில் உள்ள பல்வேறு சமுதாயத்தினரிடையே சமுதாய நல்லிணக்கம் ஏற்படுவதை ஊக்குவித்தல்.
- சமுதாய நலம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்காகச் சமுதாயமே முன்வந்து பணமாகவோ அல்லது பொருளாகவோ அல்லது உழைப்பாகவோ அளிப்பதற்கு மக்களை ஒன்று திரட்டி ஊக்குவித்தல்.
- கிராம வரைபடத்தை அங்கீகரித்தல்.
- கிராமசபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு மற்றும் அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான குறைவெண் உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் நெறிமுறையானது வரையறுக்கப்பட்டவாறு இருத்தல். கூட்டத்தின் குறைவெண் உறுப்பினர்கள் (Quorum for a Meeting) – கலந்து கொண்டாலன்றி கிராம சபையின் ஒரு கூட்டத்தில் எந்தப் பொருளும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுதல் கூடாது.
- கிராம ஊராட்சியினைக் கலந்தாலோசித்து தலைவர் கூட்டத்திற்கான நிகழ்ச்சிக் குறிப்பினைத் தயாரித்தல் வேண்டும். கிராம சபையின் முந்தைய கூட்டத்தின் முடிவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அறிக்கையினையும் அதனுள் உள்ளிட்டதாக இருக்க வேண்டும்.
- கிராம சபையின் கூட்டமானது ஆட்சியாளரால் (ஆய்வாளரால்) கூட்டப்படும்போது, கூட்டத்தின் நடவடிக்கைகளை கண்காணிக்க/ மேற்பார்வையிட வட்டார வளர்ச்சி அலுவலர் பதவித்தரத்திற்கு குறையாத ஓர் அலுவலரை அனுப்ப ஆய்வாளர் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும். அவர் கூட்டம் நடந்து முடிந்த எழுபத்திரண்டு மணி நேரத்திற்குள் அவரது அறிக்கையினை ஆய்வாளருக்கு சமர்ப்பித்தல்.

***கிராம அளவில் வாக்காளர் பட்டியலை யார் சரிபார்க்க வேண்டும் ?***

கிராம சபையில் அந்த ஊராட்சியின் வாக்காளர் பட்டியல் முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்பதை கிராம சபையில் படித்து சரிபார்க்க வேண்டும். (*தேர்தல் ஆணையத்தின் சுற்றறிக்கை 06.03.2003*).

***கிராமசபைக் கூட்டம் குறித்த அறிவிப்பை வேறு பிற உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கு தெரிவிக்க வேண்டுமா ?***

ஆம், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் மற்றும் தலைவர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட வேண்டும்.

## 4. கிராமசபை கூட்டத்தில் கவனிக்கப்பட / கண்காணிக்கப்பட வேண்டியவை பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமை

- ஊராட்சியில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து விவாதிப்பது.
- கிராம சபையில் குழந்தைகள் பங்கேற்க செய்தல் மற்றும் குழந்தை பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நிதி ஒதுக்கீடு.
- கிராமசபை கூட்டத்தில் தலித், ஆதிவாசி மற்றும் இதர விளிம்பு நிலை பெண்களின் பங்கேற்பு.

***கண்காணிக்க வேண்டியவை:***

- கிராம சபைகளை கண்காணிப்பதற்கு குழு அமைக்கப்பட வேண்டும்.
- அனைத்து தரப்பு மக்களின் பங்கேற்பும் நிர்ணயிக்கப்பட்ட முறைப்படி குறைவெண் வரம்பிருக்கிறதா ?
- ஊராட்சிகளில் அரசியல் தலையீடு அல்லது பிற செல்வாக்கு ஆளுமை செய்கிறதா ?
- சாதிய பாகுபாட்டை, சமூக நிலையை விவாதிப்பது.
- சுற்றுச் சூழல் நிலை பற்றி விவாதிப்பது.
- சுகாதார நிலை பற்றி விவாதிப்பது.
- உள்ளூர் பொது வளங்களின் நிலை பற்றி விவாதிப்பது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் (MNREGA) தலித் மற்றும் பழங்குடி மக்களின் பயன்பாட்டிற்கான நிலங்கள் சீர் செய்து தருவது மற்றும்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது.

- அடிப்படை பிரச்சனைகள்.
- முன்பு நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் எத்தனைபேர் பங்கெடுத்தனர். பராமரிக்கப்படும் பதிவேடுகள் என்னென்ன ?.
- கிராமசபை கூட்டம் நடத்துவதற்கு அனைத்து மக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் தெரியப்படுத்தப்படுகிறதா (காலம், நேரம், இடம்).

## 5. கிராம சபையை வலுப்படுத்திட திரட்ட வேண்டிய தகவல்கள்

***பொருளாதார நிலை***

- கிராமத்தின் வள ஆதாரங்கள்
- பொது சொத்துக்கள்
- உள்ளூர் வருமானம், மத்திய அரசின் நிதி, மாநில அரசின் நிதி
- வறுமை கோட்டுக்கு கீழுள்ளவர் விபரம்
- நிலமுள்ள மற்றும் நிலமற்ற மக்கள் விபரம்
- தரிசு நில விபரம்
- சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட ஊராட்சிக்குட்பட்ட நிலங்கள்
- கிராமத்தின் மொத்த நஞ்சை நிலம் எவ்வளவு, புஞ்சை நிலம் எவ்வளவு ?
- வேலை நிலை மற்றும் வேலையற்றவர்கள் விபரம்
- கிராமத்தில் எவ்வகை தொழிலாளர்கள் உள்ளனர்
- என்னென்ன தொழில் வாய்ப்பு உள்ளது ?
- தனி நபர் வருவாய் எவ்வளவு ?
- இயற்கைவளம் என்ன (மூலிகைகள், பிரம்பு, மூங்கில்) ?
- இயற்கை வளங்கள் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் மற்றும் செலவுகள் என்னென்ன ?
- அரசாங்க நல திட்டங்கள், மக்களுக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளதா ?
- ஊராட்சி ஆண்டு வரவு செலவு கணக்கு என்னென்ன ?
- வரவு, செலவு கணக்குகள் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறதா ?

***கிராமத்தின் உள்கட்டமைப்பு வசதிகள்***

- தேவையான திட்டங்கள்
- அரசு திட்டங்கள் (மத்திய, மாநில) இதுவரை நிறைவேற்றப்பட்டது
- மக்கள் தொகை விபரம் (பாலினம், சாதி, குழந்தைகள்)
- கிராமத்தில் மொத்த சுய உதவி குழுக்கள் எத்தனை உள்ளன ?
- கிராமத்தில் அடிப்படை வசதிகள் மற்றும் தேவைகள் என்னென்ன ?
- கிராம வரைபடம், ஊராட்சியிடம் உள்ளதா ?
- கிராமத்தின் இயற்கை வளங்களைப் பற்றிய வரைபடங்கள்.
- பள்ளி, கல்லூரி, மருத்துவமனை, கோயில், ரயில், பேருந்து நிலையங்கள்.
- சொந்த வீடு இல்லாதவர்கள்
- நீர் ஆதாரம் என்னென்ன ? நீரை சேகரிப்பதற்கான வழிவகைகள்
- ஊராட்சிக்கு உட்பட்ட மொத்த கிராமங்கள்.

***சமூக ஆய்வு***

- மொத்த வாக்காளர் விபரம் ( பாலினம், சாதி)
- பாலினம், சாதி, குழந்தைகள்
- சாதி ரீதியான மக்கள் நிலை
- மத ரீதியான மக்கள் நிலை
- குழந்தைகளின் கல்வி நிலை
- குழந்தைத் தொழிலாளர்களின் நிலை என்ன ?
- வாக்காளர் பட்டியலில் தகுதியானவர்களின் பெயர் விடுபட்டுள்ளதா ?
- முந்தைய கிராம சபையில் போடப்பட்ட திர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதா ? இல்லையெனில் அதற்கான காரணம்
- அடுத்த கூட்டத்திற்கான திட்டம்
- ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் தீண்டாமை மற்றும் வன்முறை பற்றிய ஆய்வு செய்தல்

## 6. கிராமசபைகளை வலுப்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்படும் மாதிரி தீர்மானங்கள்

- இந்திய அரசியல் சாசன சட்டத்தின் 73வது திருத்தத்தில் குறிப்பிட்டுள்ள 29 துறைகளுக்கான அதிகாரங்களை உடனடியாக ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று இந்த கிராம சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

- ஊராட்சிகளுக்கான மின்கட்டணத்தொகையை அரசே ஏற்க வேண்டும் என்று இந்த கிராம சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.
- ஊராட்சி ஆய்வாளர் (மாவட்ட ஆட்சியர்) தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித்தலைவர்களை பதவி நீக்கம் செய்வது (பிரிவு 205) உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களும் ரத்து செய்ய வேண்டும் என்று இந்த கிராம சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.
- மாவட்ட வளர்ச்சி முகமை குறித்து கிராமசபை கூட்டத்தில் முக்கியமாக கொண்டுவர வேண்டிய சில கூடுதல் தீர்மானங்கள் ஊராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டுமென தீர்மானிக்கப்படுகிறது.
- வாழ்வாதாரத்தை அழிக்கும் தொழிற்சாலை, உள்கட்டமைப்பு, மின் திட்டங்கள், துறைமுகங்கள், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு வளாகங்கள் போன்றவற்றை தடை செய்யும் அதிகாரம் வழங்கவேண்டுமென தீர்மானிக்கப்படுகிறது.
- MNREGA திட்ட நிதியைப் பயன்படுத்தி தலித் மக்களின் விவசாய நிலங்களை மேம்படுத்த வேண்டுமென தீர்மானிக்கப்படுகிறது.
- பிற மாநிலங்களில் ஊராட்சித் தலைவர்களுக்கு ஊதியம் வழங்குவது போன்று தமிழ்நாட்டிலும் ஊராட்சித் தலைவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
- ஊராட்சித்தலைவர், ஒன்றிய அவை (கவுன்சில்) அல்லது கிராம சபை அந்த எல்லைக்குட்பட்ட திட்டங்களுக்கு தடையில்லா சான்றை வழங்காமலிருக்க முடிவுசெய்தால் அம்முடிவே இறுதியானதாகும். இந்தமுடிவை மாவட்ட ஆட்சியர் தடைசெய்யக் கூடாதெனவும், இது குறித்து நீதிமன்றத்திடம் மட்டுமே முறையீடு செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்படுகிறது.
- நமது ஊராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர்களுக்கு அரசு அறிவித்துள்ள கூலியை முழுமையாக வழங்கக் கோரி சமூக தணிக்கை குழுவின் மூலம் வலியுறுத்துவதென கிராம சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.
- ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொது நிலங்களை சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள நபர்களிடமிருந்து த.நா. ஊராட்சிகள் சட்டப்பிரிவு 131(2)–ஐப் பயன்படுத்தி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதென கிராம சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

- நமது கிராமத்தில் ஊராட்சிக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்துவதிலும், நிதியினை ஒதுக்கீடு செய்வதிலும் எந்தவித அரசியல் தலையீடும் இருக்கக்கூடாது என இந்த கிராமசபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.
- மத்திய அரசின் வறுமைக் கோட்டிற்கான தனிநபர் வருமான அளவீடு கிராமப்புறங்களில் ரூ. 28/– எனவும் நகர்ப்புறங்களில் ரூ.32/– எனவும் என்ற அரசின் அறிவிப்பை திரும்ப பெற வேண்டும் என கிராம சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.
- உள்ளாட்சி தேர்தலில் பெண்களுக்கு 50 சதவீதம் இடஒதுக்கீடு அளித்தது போல், சட்டமன்ற தேர்தல்களிலும் பெண்களுக்கு 50 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தீர்மானங்களை கிராமசபை கூட்டத்தில் நிறைவேற்றி ஏழு தினங்களுக்குள் கூட்ட அறிக்கையுடன் மாவட்ட ஆட்சியருக்கும், அரசுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.